**THE LABOUR COURT, SALEM**
**I.D.No. 27 of 2020**

**<u>16.06.2023</u>**

**RW1 – முனுசாமி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நடத்துனராக தான் பணிநியமனம் செய்யப்பட்டேன். தற்போது வரை நடத்துனர் பணி தான் வேலை பார்க்கிறேன். 29.09.2011 முதல் மனுதாரருக்கு எந்த வழித்தடத்தில் பணி ஒதுக்கப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிக்கு வரஇயலாத சூழ்நிலையில் அவர் கொடுக்கின்ற தகவலை பதிவேட்டில் பதிய வைப்பார்கள். விடுப்பு சம்பந்தப்பட்ட பதிவேட்டு நகலை இந்த நீதிமனற்த்தில் தாக்கல் செய்யவில்லை.

புகாரில் எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்ற குறிப்பு இல்லை. 29.09.2011 தேதியில் இயக்கிய பேருந்து பற்றி தடம் எண் 470J பேருந்து எந்த வழித்தடத்தில் இயங்கக்கூடிய வேண்டிய பேருந்து என்று குறிப்பிடப்படவில்லை. தடம் எண் 470J எத்தனை மணிக்கு செட் அவுட் ஆனது மற்றும் டைம் சார்ட் பதிவுகளை நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. புகாரின் பேரில் தலைமை அலுவலத்தில் எடுக்கப்பட்ட மனுதாரக்கு எதிராக நடவடிக்கையை பற்றி எனக்கு தெரியாது.

மனுதாரரின் வருகைப்பதிவேட்டை காட்ட வருகை பதிவேட்டை நான் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. நடத்துனர் பணியிலிருந்து கட்டுப்பாட்டாளர் பதவி உயர்வு கொடுத்து பணி ஒதுக்கீட்டு உத்தரவு எதுவும் நிர்வாகம் எனக்கு கொடுக்கவில்லை.

நடத்துனராக இருக்கும்போது நான் கட்டுப்பாட்டாளராக என்று புகார் கொடுத்தது சட்டத்திற்கு எதிரானது என்றால் கிளை மேலாளர் சொன்னதால் செய்தேன். மனுதாரர் பணிக்கு ஆப்செண்ட் ஆகவில்லை என்று மனுதாரருக்கு எதிராக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Sd/–(Dr.P. Murugan),
Presiding Officer,
Labour Court, Salem.